

மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், அவதூறு பேசும் ரீல்ஸ் ஆட்சியின் டம்மி முதலமைச்சரைக் கண்டித்து, கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், கரூர் தலைமைத் தபால் நிலையம் அருகே நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வார்டு மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் வெள்ளமென திரண்டு கண்டனக் குரலை ஒலித்தனர்.

### சட்டமன்றத்தில் முதல்வர் ஆணவ பேச்சைக் கண்டித்து

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன்- சிவ.வீ.மெய்யநாதன் கண்டன உரை! பெரியண்ணன் அரசு - கவிச்சுடர் கவிதைப் பித்தன் – எம்.எம்.அப்துல்லா- டாக்டர் வை.முத்துராஜா – த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, செப்.14-

கழகத் தலைவர் அனுபவித்த மிசா கொடுமையை சட்டமன்றத்தில் கொச்சைப்படுத்தி பேசிய முதல்வர் விஜய் அவர்களை கண்டித்து

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திலகர் திடலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ, தலைமையில், வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வரவேற்புரையில், முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் எம்.எல்.ஏ முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில்



பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. உதயம் சண்முகம், வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், த.சந்திரசேகரன், சுப.சரவணன், பரணி இ.ஏ.கார்த்திகேயன்,

கே.ஆர்.என்.போஸ், செ.அசோக் பாண்டியன், அரு.வீரமணி, அ.சுப்பிரமணியன், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், கீரை.தமிழ்ராஜா, சு.சண்முகம், இரா. ஆனந்த், ஆர்.ஆர்.கே.கலைமணி, எஸ்.ஜெயராமன், வே.ராஜேஸ், க.ராஜேந்திரன், அ.அழகப்பன்,

கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், தென்னலூர் எம்.பழனியப்பன், எம்.பரமசிவம், மா. தமிழ் அய்யா, வெ.முத்துக்கிருஷ்ணன், என்.சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாச்சலம், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அ. இளங்குமரன், ஆர்.ஆர். சாமிநாதன், கே.பி.அய்யப்பன், பொன்.கணேசன், பொன்.ராமலிங்கம், கே.பி. கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், அ.முத்து, அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், இரா.கணேசன வி.ஆர். இளையராஜா, கே.எஸ். ரவி, குமார்(எ) துரைக்கண்ணு, பேரூர் கழக செயலாளர்கள் பி. அண்ணாத்துரை, உமுருகேசன். கே.சி. சிவக்குமார், என்.சாத்தையா, எம்.செந்தில்குமார், ஆர்.செல்லத்துரை, த.மணிராஜன், கே.எம்.சுப்பிரமணியன், கலைவாணி சுப்பிரமணியன், ஆர். வி.செல்வம், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.ரெத்தினம், செந்தாமரை பாலு, வி.ஜி.ஆர்.மணி வண்ணன், வி.என்.எம். பாலு, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், டாக்டர் சி. குறிஞ்சிவாணன், கவிவேந்தன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, சி.அரங்க நாயகம், அ.பிரபா, புத்தாம்பூர் எம். சுப்பையா, தி.முத்து, பாத்திமா பீவி, சக்திவேல், சர்வேயர் நடேசன், ஆ.கலைச்செல்வன், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், ஹரி விமலாதி, எம்.எம்.பாலு, கருணாகரன், மு.கலியமூர்த்தி, எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், கே.ஆர்.ராமசாமி, முகம்மது ரபீக், விளாப்பட்டி சிவா, அருண் சேகர், இரா.தமிழ்ராசு, நசுருதீன், ராசி முருகானந்தம், மகேஸ்வரி சண்முகநாதன், மழையூர் ராமசாமி, எம்.பி. சரவணன், ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், ஜெ. அஸ்ரப் அலி, ஆ.ராஜேந்திர சோழன், கே.எம்.கே.ரவிக்குமார், எம்.ஏ.எம்.இம்தியாஸ், டாக்டர் கே.என்.அமானுல்லா, வெற்றிச் செல்வன், சுப.துரைராஜா, உஷா செல்வம், வை. நடராஜன், மா.மணிவேலன், பால்ராஜ், சி.மதியழகன், பழனி தேவா, பழனிவேல, வடவாளம் க.செ.மணிமாறன், சுமோ பாலு, டி. அப்புக்காளை. செ.ரமேஷ், செ.கணேஷ், சுந்தர்ராஜ், ராஜ பெரியண்ணன்,

சொ.தமிழினியன், ராயல் சபா, பாரதி ராஜா, ஞானசேகரன், கே.வி.சுப்பையா, புதுநகர் குமார், மு.ராஜதுரை, ,தங்கமணி, ஜான் பீட்டர், முல்லை ரமேஷ், எழில் ராஜா, பாஸ்கர், பா.ஹரிகரன், சுகி, ஆலவயல் முரளி சுப்பையா, கோ.அண்ணாத்துரை, மேட்டுப்பட்டி சின்னத்துரை, அற்புத ஹென்றி, தட்சணா மூர்த்தி மற்றும்

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில் புதுக்கோட்டை மாநகர பொறுப்பாளர் துணை மேயர் எம்.லியாகத் அலி நன்றி கூறினார்.

### மைனாரிட்டி ஆட்சி முதல்வர் விஜய்யின் ஆணவப் பேச்சைக் கண்டித்து

# விழுப்புரத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி கண்டன உரை!

விழுப்புரம், செப்.14-

சட்டப்பேரவையில் மைனாரிட்டி ஆட்சியின் முதலமைச்சர் விஜயின் ஆணவப் பேச்சையும் அருவருக்கத்தக்க உடல் மொழியையும் வரலாற்று சம்பவங்களை தவறாக திரித்து பதிவு செய்வதையும் கண்டித்து விழுப்புரம் மத்தியம், தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் விழுப்புரம், புதிய பேருந்து நிலையம் அருகில், நகராட்சி திடலில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் தலைமையில் நடைபெற்றது.

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் வரவேற்புரையாற்றினார். விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் செஞ்சி K.S.மஸ்தான், விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி கண்டன உரையாற்றினார்.

உடன் வானூர் சட்டமன்ற உறுப்பினர் தி. கௌதம், மு.அமைச்சர் செஞ்சி N.ராமச்சந்திரன், மு.சட்டமன்ற உறுப்பினர்கள் மாசிலாமணி, அன்னியூர் சிவா, இரா.சேதுநாதன், N.சீத்தாபதி சொக்கலிங்கம், பா.செந்தமிழ்செல்வன், A.மாரிமுத்து, மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் விழுப்புரம் இரா.ஜனகராஜ் , தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் M. தேன்மொழி, தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா,

மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர்கள் இரா. கண்ணப்பன், பிரேமா குப்புசாமி, தயா.இளந்திரையன், மாவட்ட துணை செயலாளர்கள் T.N.முருகன், இரா.கற்பகம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்வராஜ், அப்துல் சலாம், மாவட்ட அவைத் தலைவர் Dr.ப.சேகர், மாவட்ட பொருளாளர் N.ரமணன், மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் R.விஜயகுமார், L.நெடுஞ்செழியன், சீனுராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.


மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் நன்றி உரையாற்றினார். இந்நிகழ்வில் நகர, ஒன்றிய மற்றும் பேரூராட்சி கழக செயலாளர்கள்/ தலைவர்கள்/ நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், கிளை நிர்வாகிகள், பொது உறுப்பினர்கள், கழக செயல்வீரர்கள், வெல்லும் தமிழ் பெண்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் நிர்வாக திறமையற்ற சோபா மாடல் முதலமைச்சர் விஜய் சட்டமன்றத்தில் பேசிய ஆணவப் பேச்சைக் கண்டித்து மயிலாடுதுறை பழைய பேருந்து நிலையம் கிட்டப்பங்காடி அருகே மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கழகச் செயலாளர் நிவேதா எம் முருகன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. உடன் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### சிந்தனையைத் தூண்டிய திராவிட எழுத்துகள்!

# மக்களின் நெஞ்சில் தீட்டிய கலைஞரின் குறளோவியம்!




வள்ளுவர் மீதும் குறள் மீதும் கலைஞருக்கு அவ்வளவு ஆசை. அதன் வெளிப்பாடுதான் குமரி முனையில் உயர்ந்து நிற்கும் 133அடி உயர திருவள்ளுவர் சிலை. சென்னையில் அழகாக அமைக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம். அரசுப் பேருந்துகளில் திருக்குறளை எழுதச் செய்து எல்லாரிடமும் அதனைப் பரப்பியதில் கலைஞர் அரசின் பங்கு முக்கியமானது. திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கை தமிழ்நாடு அரசின் சார்பில் கடைப்பிடிக்கச் செய்யும் முறையைக் கொண்டு வந்தவரும் கலைஞர்தான்.

1330 குறள்களுக்கும் அவர் மிக எளிமையாக உரை எழுதியிருக்கிறார்.

மு. வரதராசனார் எழுதிய திருக்குறள் உரை மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டது. அவரைப் போலவே எளிமையான உரை எழுதி மாணவர்களுக்கு மட்டுமின்றி பாமரர்களுக்கும் திருக்குறளை விளக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

திருக்குறளுக்கு உரை எழுதியதற்கு முன்பாக அவர், 354 குறள்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றுக்கு கதை வடிவிலும், நிகழ்வுகள் மூலமாகவும் கலைஞர் அளித்த விளக்கமே ‘குறளோவியம்’ எனும் சிறந்த படைப்பாகும்.

**உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய்; கடலைச்**
**செறாஅஅய் வாழிய நெஞ்சு.**

**குறள் - 1200**

இந்தத் திருக்குறளுக்கு என்ன அர்த்தம் என்பது எல்லாருக்கும் எளிதாகத் தெரிந்துவிடாது. கலைஞர் அதைக் கச்சிதமாக விளக்குகிறார்.

ஒரு நாள் கடற்கரையோரம் சென்று கொண்டிருந்தேன். ஒரு புதுமையான உருவம் கடலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. ஓர் ஆணைப் போலவோ அல்லது பெண்ணைப் போலவோ அந்த உருவம் இல்லை. பறவையினம் போலவும் தெரியவில்லை. விலங்கினமாகவும் தோன்றவில்லை. அந்த உருவத்தை நோக்கி வேகமாக நடந்தேன். அருகில் செல்லச் செல்ல, ஆல மர இலை வடிவத்தில் அது இருந்தது. அதிலேயே கண், காது, மூக்கு, வாய் என்று முகத்துக்குரிய உறுப்புகள் இருந்தன. கொடி போன்ற இரண்டு கால்கள், கொடி போலவே இரண்டு கைகள். திகைத்து நின்றேன்.

அந்த உருவம் தனது கைகளை விரித்துக் கடற்கரை மணலை அள்ளியது. அள்ளிய மணலைக் கடலில் கொண்டு போய்ப் போட்டது. மீண்டும் மீண்டும் அதே காரியத்தை செய்து கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சம் நெருக்கமாகச் சென்றேன். அந்த உருவம் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மணலை அள்ளுவதற்காகக் குனிந்தது.

“நீ யார்?” இது என் கேள்வி.

“என்னைத் தெரியவில்லை. நான்தான் இதயம்” என்றது அந்த உருவம்.

“ஓகோ இதயமா? யாருடைய இதயம்? ஆண்பாலா? பெண்பாலா?”

“என் கொடிநிகர் கால், கைகளைப் பார்த்தாலே நான் பெண் இதயம் என்று புரியவில்லையா?”

புரிந்துவிட்டது. ஒரு பெண்ணின் நெஞ்சம், ஏதோ வேதனையின் காரணமாக இப்படி வெளியே வந்திருக்கிறது.

“ஏ பெண் நெஞ்சே! எதற்காக நீ மட்டும் தனியாக வந்திருக்கிறாய்?”

“இது என் தலைவியின் கட்டளை”

“இந்த மணலையெடுத்துக் கடலில் போடச் சொன்னதும் உன் தலைவியின் கட்டளை தானோ?”

"ஆமாம்.."

“ஏன் இந்த வீண் வேலை உனக்கும், உன் தலைவிக்கும்?”

“என் தலைவி என்னைக் கூப்பிட்டு, அடியே! என் நெஞ்சமே! நீ உன் மீது அன்பு இல்லாதவரிடம் உன்னுடைய துன்பத்தையும், அவரைப் பிரிந்திருப்பதன் வேதனையையும் சொல்லிப் பயன் கிடையாது. அதைவிட எளிதான வேலை, மணலை அள்ளிப் போட்டு ஆழ்கடலைத் தூர்ப்பதாகும். எனவே அந்த வேலையைச் செய் என்றாள். அதைத்தான் இப்போது செய்கிறேன்”

பதிலைக் கேட்டதும் என் தலை சுற்றியது. காதலனிடம் தன் வேதனையைச் சொல்லி, அவனைத் தன் மீது அன்புக்கொள்ளச் செய்வதைக் காட்டிலும் கடலைத் தூர்ப்பது எளிதாம்.

விழித்துக் கொண்டேன். கனவு எனப் புரிந்தது. என் நெஞ்சின் மீது கிடந்த திருக்குறள் சுவடியை உற்று நோக்கினேன். அந்தக் குறளை மீண்டும் ஒரு முறை படித்தேன் என்று எழுதியிருக்கிறார் கலைஞர்.

இப்போது அந்தக் குறளை நீங்களும் மீண்டும் படித்துப் பாருங்கள். அர்த்தம் எளிதாகப் புரியும். இதுதான் கலைஞர் படைத்த குறளோவியத்தின் சிறப்பு.